பக்கங்கள்; 8 விலை; ரூபா 10.00

சங்கமம்
SANGAMAM
"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"
கூட்டுறவுக் குரல் Voice of Co-op

ஆறு 2 திருவள்ளுவர் ஆண்டு 2029 செப்ரெம்பர் 1998 அருவி 1

# வன்னிச் சமரில் புதிய வரலாறு

# ஜீவாதார நிலம் மீட்கப்பட்டது!

## மக்கள் புகழாரம்

(அலுவலக நிருபர்)

இரணைமடுக்குளத் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைபண்ணப்பட்டு வந்த பெருமளவு நிலப்பரப்பு 1996 ஜூலையில் இடம்பெற்ற சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இதனால் இப்பகுதியில் வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அல்லற்பட்டனர். இவர்களுக்கான நிவாரணம் கூட ஸ்ரீலங்கா அரசால் வழங்கப்படவில்லை

இந்நிலையில்,

ஓயாத அலைகள் இரண்டின் மூலம் நிலங்கள் மீட்கப்பட்டதால் தமது ஜீவாதார தொழிலான விவசாயத்தை மீண்டும் மேற்கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது பற்றி இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பிரிகேடியர் தலைமையிலான 3500 படையினரைக் கொண்ட அணி அழிக்கப்பட்டு கிளிநொச்சி மீட்கப்பட்டுள்ளது

தமிழீழ தேசியத்தலைவரின் சாதனையை போற்றி தானைத் தளபதிகளின் போர் வீரம் புகழ்ந்து வீர கொண்ட வேங்கைகளை வாழ்த்தி கிளிநொச்சியில் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி மகிழ்ந்தனர்

தமிழீழப் போராட்ட வரலாற்றில் மட்டுமன்றி உலகப் போரியல் வரலாற்றிலும் மிகவும் காத்திரம் மிக்க சமராக முக்கியத்துவம் பெற்றுள்ளது

இச்சமரில் போராளிகள் வெளிப்படுத்திய மன வலிமையும், செயலாற்றலும், அபாரமான சகிப்புத் தன்மையும் தலைசிறந்த போர்ப்பண்புகளையும் மக்கள் பாராட்டியதுடன் சிங்கள தேசத்தின் முப்படைகளுக்கும் சவால் விட்டு சமராடுமளவிற்கு தமிழர் படையின் வளர்ச்சியும் போர் வலுவும் பெருமைக்குரியது என மக்கள் கருத்து தெரிவித்தனர்.

சமரில் வீரமுடன் களமாடி மண்ணின் விடிவிற்காக வித்தாக வீழ்ந்த வேங்கைகளுக்கு மக்கள் தமது அஞ்சலிகளை உணர்வு பூர்வமாக செலுத்தினர்.

## சங்கமம் வெளியீடு

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க ஆதரவில் ஆவணி மாத சங்கமம் வெளியீடும், கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும். மேற்படி சங்கத் தலைவர் தி. சுந்தரலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது

இந் நிகழ்வில் தமிழீழ சமூக மேம்பாட்டுநிறுவன பொறுப்பாளர் திரு கி பாப்பா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மற்றும் பல கூட்டுறவுப் பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மதிப்பீட்டுரையை கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு இ மகேந்திரன் நிகழ்த்தினார் சங்கமம் பிரதம ஆசிரியர் ப. கனகலிங்கம் பதிலுரை வழங்கினார் அத்துடன் ஊர்காவற்றுறை ப நோ கூ சங்க கலைஞர்கள், விளையாட்டு வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வை ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கமே மேற்கொண்டது.

## அரசும் புலிகளும் பேச வேண்டும்

### பேராயர் பெர்னாண்டோ வலியுறுத்து

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்து முகமாக தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும். சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக சமரசப் பேச்சுவார்த்தை முயற்சிகளில்இரு சாரார் மத்தியிலும் அர்ப்பணிப்பு பேணப்பட வேண்டும் என இலங்கை திருச்சபையின் கொழும்பு பேராயர் அதிவண கே எம் ஜே பெர்னாண்டோ அண்மையில் கொழும்பு அதிதியட் சாதீன வருடாந்த அமர்வுக் கூட்டத்தில் உரையாற்றுகையில்தெரிவித்தார்.

இணக்க உதவியாளரின் சேவைகளை பெற்றுக் கொள்வதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என மேலும் வலியுறுத்தியுள்ளார்

---

சமூகப் பொறுப்புள்ள ஒரு சிறந்த கூட்டுறவுச் சேவையாளனை

## இழந்துவிட்டோம்



நாட்டுப்பற்றாளர்
செல்வன்
**மாணிக்கம சுதானந்தராசா**
மறைவு குறித்து
கரைச்சி கிழக்கு
பொதுமுகாமையாளர்
சி, புவனேஸ்வரன்

சுதா என அன்பாக எல்லோராலும் அழைக்கப்படும் மாணிக்கம் சுதானந்தராசாவின் இழப்பு கூட்டுறவுத் துறைக்கே பேரிழப்பாகும். 1992 ஆம் ஆண்டு கரைச்சி தெற்கு ப. நோ கூ சங்கத்தில் விற்பனையாளராகச் சேர்ந்து தனது சேவையால் உயர்ந்து கிளை முகாமையாளராகி பின்பு, 1997ல் அதே பதவியுடன் கரைச்சி கிழக்கு ப நோ கூ சங்கத்துக்கு விடுவிக்கப்பட்டு கூட்டுறவுப் பயிற்சி பயின்றுவரும் காலத்திலேயே 1998-09-28ம் திகதி தேசவிடுதலை மீட்புப் பணிக்குச் சென்றவேளை அகால மரணத்தைத் தழுவிக்கொண்டார். கீழ்ப்படிவும் மதிறையோரை மதித்தல், விட்டுக்கொடுத்தல், பொதுசனத் தொடர்பை வளர்த்தல் போன்ற நற்பண்புள்ளவர் சிரித்த முகத்துடன் பாவனையாளருடன் பழகும் சுபாவமுள்ளதால் தான் சேவைசெய்த இடங்களில் எல்லாம மக்களின் மதிப்புப் பெற்றவர், சத்ஜெய நடவடிக்கையின் போது தன்னுயிரைத் துச்சமென மதித்து சங்கச் சொத்துக்களைப் பாதுகாப்பதில் முழுமூச்சுடன் உழைத்து நிர்வாகிகளின் பாராட்டுக்குள்ளானார்.

எனது முகாமைத்துவத்தின் கீழ் 7 வருடங்களுக்கு மேல் வேலைசெய்த இவர் என்றுமே கண்டிக்கப்பட்டோ, தற்காலிக இடைநிறுத்தத்துக்கோ அன்றேல் வேறு விதத்திலோ தண்டிக்கப்படாத ஒரு உத்தம பணியாளர் இவரது பெற்றோருக்கு செல்லமாக எவ்வாறு வாழ்ந்தாரோ எம்மிடமும் செல்லமாகவே தாபன விசுவாசத்துடன் கடமையைச் செய்துள்ளார் இவரது இழப்பு எமது சங்கத்துக்கு மட்டுமல்ல கூட்டுறவுச் சமூகத்துக்கே ஓர் இழப்பாகும் கூட்டுறவுக் கல்லூரியில் பயின்றவர்களின் அன்பையும் குறுகிய காலத்தில் தேடிவிட்டார், இவரது இழப்பு எம்மாலும், அவரின் பெற்றோர், உறவினர்களாலும் பொறுக்க முடியாது இருந்தும் புகழுடன் தோன்றி அழியாத புகழுடன் அமரத்துவம் அடைந்துவிட்டார். அதனை எண்ணி ஆறுதலடைவோமாக,

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

---

வெளியீட்டுக்கான ஆதரவு: கிளி/ தெல்லிப்பளை ப. நோ. கூ, சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் ஓர் வெளிச்சம்

## குட்டிக்கதை

மார்கழி மாதத்து பனிக்குளிரும் சில்லென்று வீசிய கடற்காற்றும் பாக்கியத்தின் நித்திரைக்கு தாலாட்டாகின. ஆனாலும் மாதா கோவிலில் ஒலித்த மணியோசை அதிகாலை 4.00 மணியென்பதை அந்த ஊருக்கே சொல்லி வைக்க அவளும் நித்திரைக்கு முற்றுப்புள்ளி வைத்து நிமிர்ந்தாள். எழுந்தவள் காலைக் கடமைகளை கவனித்துக் கொண்டிருக்க தூரத்தில் சிறிது சிறிதாய் கேட்ட ஒரு இரு வெடிச்சத்தங்கள் அருகில் கேட்பது போன்று பெரும் சத்தத்துடன் தொடர்ந்து கேட்கக் கடலிலும் வெடி ஓசை கேட்ட

சங்கப்படியை ஏறியே இருக்காதவள் இன்று மட்டும்

வண்ணமிருக்க வானத்தில் விமானங்கள் வட்டமிட ஆரம்பித்தன அறிகுறிகள் அனைத்தும் எங்கோ சண்டை நடக்கிறதென்பதை அவளுக்குணர்த்திய போதும் அவளின் உணர்வுகள் மட்டும் அந்தக் கடற்கரையை சுற்றியே வட்டமிட்டன. கரைசேரும் தோணிக்காரர்களிடம் வாங்கும் கடல்வாழ் உயிரினங்களை சந்தையில் கொண்டுபோய் விற்று சீவியம் நடத்தும் அவளின் வாழ்வு நிலை இன்று எப்படி அமையுமோ என அந்தப் பேதைப் பெண் கலங்கியதில் அர்த்தமிருந்தது அவளும் அந்தக் கிராமத்தில் ஒரு காலத்தில் சொந்தக் காணியில் பெரிய கல்வீட்டில் சம்மாட்டியின் மனைவி என்ற அந்தஸ்துடன் வாழ்ந்தவள் ஆனால் வழமைபோல் ஒரு நாள் தொழிலுக்கு சென்ற சம்மாட்டியோ அவனது படகோ கரைசேரவில்லை. கடற்படைத் தாக்குதலால் கடலோடு படகும் சம்மாட்டியும் எரிந்து சாம்பலாய் போகவே நல்லாய் இருந்த

போது இல்லாத உறவுமுறை சொல்லி வந்தவர்கள் எல்லாம் அவளை விட்டு விலகிவிடவே இருந்த கடன்களைச் செலுத்த வீட்டையும் காணியையும் விற்று இன்று கடற்கரையில் அர

சாங்க காணியில் சிறு குடிசையில் தனது வாழ்வு நிலையை கொண்டு செலுத்தும் அவள் தனது பிருந்தா, பிரணவன் ஆகிய இரண்டு பிள்ளைகளையும் எப்படியும் படிக்க வைத்து விடவேண்டும் என்பதையே வாழ்வின் குறிக்கோளாக கொண்டிருந்தாள். வேலைகளை முடித்து கடற்கரை சென்றாள் அங்கே இரவு யாரும் தொழிலுக்கு செல்லவில்லை என்பதை அறிந்ததும் திரும்பி வீடு விரைந்தாள் அந்த நேரத்தில் அவ்வூர் மக்கள் மூடை முடிச்சுகளுடன் இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். அவசரமாய் வீடு சென்றவள் பிள்ளைகளை பாடசாலை செல்ல ஆயத்தப்படுத்தி விட்டு அவர்களின் காலை உணவாக கஞ்சி காய்ச்சி கொடுப்பதற்காய் அரிசி வாங்க கடைக்கு புறப்பட்டாள், ஊரே வெறிச்சோடிக் காணப்பட்டது. ஆனால் அவள் மட்டும் அந்தக் கொட்டிலையும் கடற்கரையையும் விட்டுவிட்டு எங்கே போவாள்? அவளை யார் வரவேற்பார்கள். அதனால் அவள் வேறு இடம் செல்ல சிந்திக்கவில்லை.

**காவலூரன்**

சிந்தனையை கலைத்தவளுக்கு அருளம்பலத்தாரின் கடை பூட்டிக்கிடப்பதைக்கண்டு மேலும் ஏக்கம் அதிகமாக குறுக்கே வந்த மணியத்திடம் "மணியண்ணை கடை பூட்டிக்கிடக்கு அருளம்பலத்தார் வீட்டில இல்லையோ" என்று கேட்க அவை விடியவே எங்கேயோ போயிற்றினம்

(3-ம் பக்கம் பார்க்க)

# தொழில் நுட்பத்துக்கோர் ஒளிவிளக்கு

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த விஜயதசமி அன்று ஒரு அகல் விளக்கு ஏற்றிவைக்கப்பட்டது. கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்ட இம் மாவட்டத்தின் தொழில்நுட்பக் கல்விக்கான ஒளிவிளக்கு ஒளிரத் தொடங்கியுள்ளது. ஒரு ஒளிமயமான எதிர்காலம் பற்றியதான கனவுநிலையே அங்கு ராரர்ப்பண நிகழ்வில் உணரப்பட்டது.

பாதுகாப்பமைச்சக அனுமதி, பல்வேறு திணைக்கள அனுமதி என்பவற்றுக்கிடையே அல்லாடிய இதனை, தமது நிதியுதவியில் பொறுப்பேற்றுக் கொண்ட தொண்டர் நிறுவனங்களுக்கும், இதனை உருவாக்குவதற்கு அயராது உழைத்தவர்களுக்கும் நிலம் தொட்டு சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்த இம் மாவட்ட மக்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாவர்.

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் (Kilinochchi District institute of Technical Education) எனப் பெயரிடப்பட்டு ஆனைவிழுந்தானில் அமைக்கப்பட்டுள்ள இந் நிறுவனம் தொழிற் திணைக்களத்தின் கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி நெறிகளை நடத்தும் நிறுவன அமைப்புடையது ஆகும், தேசிய

**- சஞ்சிகா -**

தராதரப் பத்திரம் (National Certificates) கைவினைஞர் பயிற்சிகள் (Craftsman trainings) என்பனவே இங்கு வழங்கப்படும். தற்போது கணக்கீட்டுத் தொழில் நுட்பம் (N C. A. T) ஆங்கிலத் தகுதித் தேர்வு (N C.E) ஆகிய தேசிய சான்றிதழ் பயிற்சிகளும், கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தில் மரவேலை பாட நெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எதிர்காலத்தில் மேலும் பல்வேறு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

இக்கல்லூரி வெறுமனே நாட்டிலுள்ள ஏனைய அரசாங்க தொழில் நுட்பக்கல்லூரிகளைப் போன்று வெறும் சான்றிதழ்களை மட்டுமே பெற்றவர்களை உருவாக்குகின்ற நிலையமாக மட்டுப்படுத்தப்படாமல்

எமது பிரதேசத்தின் தேவைகளை, வளப்பயன்பாடுகளைக் கணக்கில் எடுத்து எமது மாவட்ட அபிவிருத்திக்கு உதவக்கூடியதான தொழில்நுட்ப அறிவுத்திறன், மனப்பாங்குடைய இளைஞர்களை உருவாக்கவேண்டும். இதன் மூலமே இத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் இம் மாவட்டத்திற்கு பயனுடைய தாக அமையும்

(3-ம் பக்கம் பார்க்க)

## நீங்காத நினைவில்

மாணிக்கம் சுதானந்தராசா
(கூட்டுறவுக் கல்லூரி மாணவன் - அக்கராயன்)

கரைச்சி கிழக்கினிலே
கண்ணியமாய் கடமைபுரிந்தவன்
கல்லூரி வந்ததும் கல்வியிலே ஆர்வம்
காட்டினாய் உனது புத்தகங்கள் - இன்று
உன்னைத் தேடுகின்றன
எட்டு மணியானதும் - நாம
உன்னைத் தேடுவோம
உன் கதை கேட்டாலே
வகுப்பெல்லாம் கலகலப்பாகும்

மூதிதான உன்சிரிப்பும் அன்பான
உன் பேச்சும் கேட்காத நாள்
இல்லையே இப்போது எமக்கெல்லாம்
உன் நினைவு கல்லூரி வாசல்
உன்னைத் தேடுகின்றது உன்சக
மாணவர் நாம் - இங்கே உன்
சிரிப்பையும் உன் கதையையும்
தேடுகின்றோம உன் நினைவே
என் நாளும் எம்மனதில்

கிளி/மாவட்ட கூட்டுறவுக் கல்லூரி
அக்கராயன்

## கல்லறைக்குள் ஜனநாயகம்

செம்மணி !
எங்கள் தேசத்தின்
வரலாற்றுப் பக்கங்களில்
கறைபடிந்த
கருப்பொருள்

ஊரைப்பிடித்தது
உறவுக்குப் பாலம் என்று
சொன்ன கதையை
தவிடு பொடி யாக்கிவிட்டது

# ...கவிதை வெளி...

அந்தச் சரித்திரம்
பிஞ்சும், பூவும், காயும், கனியுமாய்
காணாமல் போனவர்களின்
'விசிற்றிங் காரட்' டிற்கு
இப்போ விலாசம் தருகிறது
அக்களரி நிலம்

சரித்திரத்தின் பொருளடக்கம்
எங்களுக்கு கோபத்தை
தாரை வார்க்கிறது!
கறுப்பு யூலைகள்
கிராமப் படுகொலைகள்!
சிங்களக் குடியேற்றங்கள்!
கோட்டா வெட்டுக்கள்!
இப்போது, 'செம்மணி'
புதை குழிகளை வெட்டித் திறவுங்கள்!
என்புக்கூடுகளை எடுப்பதற்காக அல்ல
ஜனநாயகத்தையும் மனித உரிமையையும்
விடுதலை செய்ய

**திருநகரூர் ஜெகா**

## கூட்டு (உ)றவு

கூட்டுறவானவே பார்
தேனிக் கூட்டத்தில் - ஓர் உறவு
அதுவே கூட்டு(உ)றவு
அவ் உறவில் ஓர் கூடு
உண்டாம்
உன் உறவிலும் இதுவே
வேண்டும்
உன் உறவில் ஒற்றுமை
இருக்கிறதா — இப்போது
சிந்தி
கூட்டுறவே நாட்டுயர்வாம்
அவ் உயர்வில் உன் கடமையும்
இருக்கிறது
அதை உணர்வாயா? நீ
உணர்ந்தால் உன் பணியை
தொடர்
உன் உறவால்
நாடு உயர்வு காணட்டும்!

**வன்னியூரான்**
வட்டக்கச்சி

## சமூகம்

மூன்று மாடி பங்களா
முன்னால்
முற்றத்தில் பூந்தோட்டம்
கண்ணாடி யன்னல்கள்
பளபளக்கும் காரிரண்டு
வர்ணம் தடவிய மதில்கள்
அதன் மேல்
விதவித மின்குமிழ்கள்
இது
திண்ணையிற் குந்தி
ஒரு ஓவியன் வரைகின்ற
அவன்
ஏக்கங்களின் வெளிப்பாடு
மேலே
வானத்திற்கு வாசல் திறந்த
கூரையின் வெளிச்சத்தில்
பளிச்சிடுகிறது அந்த அற்புத ஓவியம்
இதை
இந்தச் சமூகம்
ஒற்றைக்கிடுகு வாங்கும் காசிற்கு
வாங்கும்?
டயானா அணிந்த கழித்த
ஆடையை
பங்களாவை விற்றேனும்
வாங்கும் சமூகம் தானே இது!

**- பொன் காந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 76-வது சர்வதேச கூட்டுறவாளர் விழாவில் ஒலித்தவை

## மக்களின் துயரமான வேளைகளில உதவுதல் கூட்டுறவாளன் கடமையாகும்

தன்னுடைய செயற்பாடுகளைப்பற்றி விமர்சனம் செய்வதற்கு அலலது கருத்துக் கூறுவதற்கு அனுமதிக்கின்ற ஒரு ஜனநாயக வலிமையுள்ள நிறுவனம் கூட்டுறவு மட்டுமே

கூட்டுறவு வளர்ச்சிக்கு பல்வேறுவகையான ஆதரவு இருந்தபோதும் பல கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிக்ப்படுகிறது. இதனை மாற்றுவதறகு பல்வேறு உற்பத்திசார் நடவடிக்கைகளில் மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய விதத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் முதலீடு செய்ய வேண்டும்.

கூட்டுறவுச சங்கங்களின் ஒன்றியம் அமைக்கப்பட்டது போன்று இம் மாவட்டத்தில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசமும் அமைக்கப்பட வேண்டும் இதன் மூலம் எமது மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின மூலதனப பற்றாக் குறையைப் போக்க முடியும்

மக்களின் துயரமான வேளைகளில் உதவுதல் வேண்டும் இது கூட்டுறவாளர்களின் முக்கிய கடமையுமாகும் அதே போன்று தம்மிடையே எழும் முரண்பாடுகளை சுமுகமாகத் தீர்த்தலும் கூட்டுறவாளனுக்குரிய உயரிய பண்பாகும்

திரு . தி. இராசநாயகம்
அவர்கள்
கிளிநொச்சி அரசாங்க
அதிபர்

## யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவைசெய்யவே ப. நோ. கூ. சங்கங்கள் தோன்றின

மக்களால் அவர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவர்களாலேயே உருவாக்கப்படும் அமைப்பே கூட்டுறவாகும் ஆயினும் இலங்கையில் இரண்டாம் உலகயுத்தம் காரணமாக ஏற்பட்ட உணவு வினியோக நெருக்கடிகளை தடுப்பதற்காகவே பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் உருவாக்கப் பட்டது உகை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அன்றைய கால மக்களுக்குச் சேவை செய்தலே அதனுடைய பிரதான இலக்காக இருந்தது இன்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு சேவை செய்தலே இன்றைய கால கட்டத்திலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும்.

ஒற்றுமையின் சின்னமாக இன்று உலகில் கூட்டுறவு உள்ளது. எனவே நாமும் ஒற்றுமையாக இருத்தல் என்பதே அவசியமானது

திரு முருகேசு அவர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி
உதவியாணையாளர்,
கிளிநொச்சி

## தேவைகளை முழுமையாக வழங்கமுடியாமையாலேயே விமர்சனங்களைச் சந்திக்கிறோம்

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய கூடியனவான சேவைகளை வழங்க முடியாமையினாலேயே கூட்டுறவு, கல்வி, சுகாதார நிறுவனங்கள் மிக அதிகமான விமர்சனங்களையும் கண்டனங்களையும் சந்திக்கின்றன அதிகரித்துக் காணப்படும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகின்ற நிலைமைகளே இதற்கு காரணமாகும்.

கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இலைக் கஞ்சித்திட்டம் உண்மையிலேயே ஏழை மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. பாடசாலை வராதிருந்த பல மாணவர்கள் மீண்டும் பாடசாலைக்கு வரக் கூடியதாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

திரு ப. அரியரத்தினம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## சுகாதார சேவையிலும் கூட்டுறவுப் பங்களிப்பு

மக்களுடைய தேவைகள் எல்லாவற்றையும் நிறைவு செய்வதற்கு பல துறையினருக்கும் உதவும் ஒரு நிறுவனம் கூட்டுறவே அவசரமாக நிர்மாணிக்கப்பட்ட கொலரா விடுதியின் நிர்மாணிப்பின் பெரும் பகுதியை கூட்டுறவுச் சங்கங்களே பொறுத்துக் கொண்டன. அதே போன்று இலவச மூக்குக்கண்ணாடி போன்ற பல்வேறு திட்டங்களின் ஊடாகவும் சுகாதார சேவையில் உதவுவது கூட்டுறவே

கலாநிதி விக்னேஸ்வரன்
வைத்திய அதிகாரி

## கூட்டுறவு வளர்ச்சிக்கு எல்லை என்பது இல்லை

கூட்டுறவு ஓர் மக்கள் சார்ந்த நிறுவனமாகும். இன்றைய தேசிய விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்ற ஒரு நிறுவனமாகவும் கூட்டுறவு திகழ்கிறது.

எமது பிரதேசம் ஓர் விவசாயப் பிரதேசம் ஆகும் எனவே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு திட்டங்களை செயற்படுத்த கூட்டுறவு முன்வர வேண்டும் விவசாயப் பண்ணைகள், விவசாயம் சார்ந்த சிறு கைத்தொழில்கள் என்பவற்றை அமைக்க ஊக்குவிக்கும் பலவேறு கடன் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் கூட்டுறவின் வளர்ச்சிக்கு எல்லை என்பதே இல்லை

திரு பூவண்ணன்
தமிழீழ நிர்வாக சேவைப்
பொறுப்பாளர்

தொகுப்பு: அ—அ

## மொழிகற்கும் ஆர்வத்தை சிறுவர்களிடம் ஏற்படுத்துங்கள்

ஆங்கில மொழியை கற்பிப்பது என்பதைவிட பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்கான ஆர்வத்தை ஏற்படுத்துவதே முக்கியமானது. பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட பருவத்திலேயே இன்னுமொரு மொழியைக் கற்றுக்கொள்வதற்குரிய ஆற்றலை இவை பெறுவார்கள். எனவே குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் ஆங்கிலம் கற்றுக் கொள்வதற்கான ஆர்வத்தை ஏற்படுத்துங்கள் என கிளிநொச்சி மாவட்ட ஆங்கில பாடத்துக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு இ. தனராஜா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கரைச்சிக் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கில தின நிகழ்வுகளின் பரிசளிப்பு வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந் நிகழ்வில் ஏனைய சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற சேவைக்கால ஆலோசகர் திரு மரியதாசன், வைத்திய கலாநிதி முருகானந்தன் விவசாய சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு சிவகுருநாதன் ஆகியோர் கலந்து கொள்ள பிரதம விருந்தினராக கோட்டக்கல்வி அலுவலர் திரு வைரமுத்து கலந்து கொண்டார்.

## மரக்கறிச் செய்கைககு கெயர் உதவி

மரக்கறிச் செய்கைக்கென ரூபா பத்தாயிரம் வீதம் மல்லாவி பிள்ளையார் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு கடனுதவி 'கெயர் உலக' நிறுவனம் வழங்கியுள்ளது சிறுதொழில் அபிவிருத்திக்கான குறுமக் கடன் திட்டத்தின் கீழேயே இக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான கடன் உதவிகள் மிகுந்த பயனளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுளது.

## சேமிப்பே அபிவிருத்தியின் அடித்தளமாகும்

சேமிப்பே தனிமனிதனதும் நாட்டினதும் பொருளாதார மேம்பாட்டிற்குரிய அடித்தளமாகும் எனவே சேமிப்பு பழக்கம மக்களிடையே ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியமாகும். வங்கிகளை விடவும் அதிக வட்டியான 14% வட்டி வழங்கி விசேடசேமிப்பு திட்டங்களை நடைமுறைப் படுத்தும் மட்டக்களப்பு சிக்கன கூ. ச சமாசத்தின் நடவடிக்கை பாராட்டப்படவேண்டிய தொன்றாகும் என மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்

மட்டு சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட சேமிப்புத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்விலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாவில் முகாமைத்துவ கருத்தரங்கு

சென்ற 10 09 98 தொடக்கம் 16-9-98 வரையானகாலப் பகுதியில் இலங்கை கூட்டுறவு முகாமைச்சேவைநிலையமும், வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சபையும் இணைந்து நடாத்திய கூட்டுறவுப்பணியாளர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு மூன்று கட்டங்களாக நடைபெற்றது

முதலாவது கருத்தரங்கு பொதுமுகாமையாளர்கள் கணக்காளர்கள், செயலாளர்கள், வர்த்தக முகாமையாளர்களிற்கும் இரண்டாவது கருத்தரங்கு பொது மற்றும் கணக்குப்பகுதி லிகிதர்களிற்கும் மூன்றாவது கருத்தரங்குகல்வி உத்தியோகத்தர்கள், கிளை மேற்பார்வையாளர்கள், களஞ்சிய முகாமையாளர்கள் என நடாத்தப்பட்டது

இக்கருத்தரங்கில் பங்குபற்றியவர்களிற்கிடையிலான மதிப்பீட்டுப் பரீட்சையில் அதிக புள்ளியைப் பெற்றவர்களிற்கு வெற்றிக்கிண்ணம் வழங்கி கௌரவிக்கப்பட்டது

இதில் கணக்குப் பகுதி பயிலரங்கில் பங்கு பற்றி கரைச்சி கிழக்கு ப நோ கூ சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் திரு. க சதீஸ்குமார இரண்டாம் இடத்தினையும், கல்வி உத்தியோகத்தர்களுக்கான பயிலரங்கில் பங்கு பற்றி கரைச்சி தெற்கு ப. நோ கூ. சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் திரு செ. பாலேந்திரன் முதலாவது இடத்தினையும் பெற்று வெற்றிக் கிண்ணங்களை பெற்றுக்கொண்டனர்.

---

தொழில்

இதற்கமைவாக விவசாயப் பிரதேசமான எமது மாவட்டத்திற்கு பொருத்தமுடையவையாக உள்ள விவசாயத்திலான தேசிய தராதரப் பத்திரம் (N Crin Agriculture) மனைப் பொருளியலிலான தேசிய தராதரப் பத்திரம் (N C Home Rconomic) போன்ற பயிற்சி நெறிகள் உள்ளன எனினும் இவை தற்போது சிங்கள மொழிமூலம் மட்டுமேயுள்ளது தமிழ்மொழி மூலம் இவை எமது தொழில்நுட்பக் கல்லூரியூடாக நடாத்தப்பட முயற்சி செய்யப்பட வேண்டும் சற்றுச் சிரமமானது எனினும் வெற்றி கிட்டினால் எமது பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு உதவக்கூடிய பொருத்தமான தொழிநுட்ப அறிவினையும் பல்வேறுவகையான விவசாயம் சார்ந்த சிறுகைத்தொழில்; சுய தொழில்; முயற்சியாண்மைக்கு (Enter prenuership) வழிகோலும்.

அத்தோடு பல்வேறு நாடுகளின் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து கூட்டான பயிற்சிகளை வழங்கக் கூடிய Autonomus நிறுவனமாகவும், சாதாரண பொதுமக்களை (In Formal Education) முறையில் கல்வியூடாக அவர்களின் ஆர்வங்கள். தேவைகள் என்பவற்றை பூர்த்தி செய்யக் கூடிய குறுகியகால வார இறுதி. புறநிலைக் கற்கை அலகுகள், ஊடான பயிற்சிகள் என்பவற்றையும் வழங்கும் நிறுவனமாகவும் செயற்பட வேண்டுகின்றேன்.

எமது மாவட்ட சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்கும் நிறுவனமாக வாழ்க வளர்க என வாழ்த்துகிறோம்,

---

அருளில்

உங்க எல்லாக் கடையும் பூட்டிக் கிடக்கு என்று சொல்லியவாறே சைக்கிளை மிதித்துக்கொண்டிருந்தார் மனம் கோணாதவளாய் தனக்குத் தெரிந்த நாலு ஐந்து கடைகளுக்கு சென்று பார்த்தாள் எலலாமே பூட்டிக்கிடக்கக் கண்டு சோர்வுற்றவளாய் திரும்பி நடந்துவந்தவேளை சந்திக்கருகில் இருந்த சங்கக் கடை திறந்திருக்க அதில் ஒரு சிலர் சாமான்கள் வாங்கிக் கொண்டிருக்கக் கண்டாள் அன்று மட்டும் அந்த சங்கப் படியே ஏறியே இருக்காதவள் இன்று மட்டும் எல்லாக்கடைகளும் பூட்டியிருக்க எல்லோரும் இடம்பெயர்ந்து செல்ல இங்கு மட்டும் இருவர் எப்படி இவ்வளவு ஆறுதலாய் வியாபாரம் செய்கிறார்கள். சிந்தித்துக் கொண்டே மனேஜர் அருகில் வந்தவள் ஒரு கிலோ அரிசிக்காய் பில்போட்டார். எவ்வளவு அன்பாய் கதைக்கும் மனேஜரும் ஆறுதலாய் நிறுக்கும் விற்பனையாளரும், இறைவா இவர்களைப் பற்றியா தப்பான எண்ணங்களைக் கொண்டிருந்தேன். நிறையில் வெட்டுவினம் தரமான பொருட்கள் விற்க மாட்டினம் நேரம் செல்ல திறந்து நேரத்திறகு பூட்டுவினம் நினைக்கவே அவள் கண்கள் கலங்கின அருளம்மை தாற்ற கடையில பொருள் உள்ளே வைத்துத் தான் நிறுத்துத் தாறவை ஆனால் இங்க எங்கட கண்ணுக்கு முன்னுக்கு நிறுத்துத் தருகுதுகள் இது எப்படி? எண்ணங்களை கலைத்தவளாய் ''தம்பியவ எல்லாரும் ஊரை விட்டு ஓடிப்போயிற்றினம் இப்ப ஊரடங்குச் சட்டம் உங்கடை குடும்பங்களை அனுப்பிப் போட்டியளே'' மனேஜர் சொன்னார், ஓடிற சனத்தோட அவையளும் ஓடியிருப்பினம நாங்க அந்தரிக்கிற சனத்துக்கு உதவிசெய்ய வேணும் அதுதான் எங்கடை நோக்கம் படியைவிட்டிறங்கியவள் மனிதததின் மதிப்பை உணர்ந்த சேவையாளர்களின் நினைவோடு நடந்தாள்!

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள் ஓர் அறிமுகம்

## கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 1972-ம் ஆண்டு 3ம் மாதம் 08ம் திகதி பதிவு செய்யப்பட்டது அப்பொழுது எமது சங்கத்தின் தொழிற்படு பிரதேசம் கரைச்சி காரியாதி பிரிவுகளும், துணுக்காய் காரியாதி பிரிவுகளும், வவுனிக்குளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எல்லைகளையும் உள்ளடக்கியதான மிகப் பரந்த தொழிற்பரப்பு பிரதேச எல்லைகளை கொண்டிருந்தது அப்போது இச் சங்கத்தின் ஆரம்ப தொழிற்படு அங்கத்தவர்களாக 391 அங்கத்தவர்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர் அவ்வேளையில் பணியாளர்கள் 57 எண்ணிக்கை உடையவர்களாகவும் சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கிளைகள் 22 கிளைகளும் இருந்தன

இச் சங்கத்தின் ஆரம்ப நடவடிக்கைகளாக அங்கத்தவரிடையே இருந்து கள் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும், கிளைகளிடையேயான கள் மாற்றமும் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது. அத்துடன் ஆரம்ப காலத்திலேயே இந் நிறுவன அமைப்பில் மிகப் பெரிய அளவினதான தொழிற்படு பிரதேசங்களையும் பெரிய எண்ணிக்கையிலான கிளைகளையும், கூடிய தொகையிலான அங்கத்தவர்களையும் உள்ளடக்கி மிகப்பெரிய கூட்டுறவு நிறுவனமாக விளங்கியது, ஆரம்ப காலத்திலேயே எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்த கள் உற்பத்தி விற்பனையிலும் மதுசார்ந்த நடவடிக்கையிலும் மிகக் கூடுதலான இலாபத்தை அடைந்து ஓர் இலாபகரமான கூட்டுறவு சங்கமாக வளர்ச்சியை கண்டுள்ளது,

1975-ம் ஆண்டு காலப்பகுதியில் எமது சங்கத்தின் வளர்ச்சியில், சங்கத் தொழிற்பாட்டுடன் வெல்ல உற்பத்தியும் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் எமது சங்கத்தின் பணித்தொகுதி 70 பேராக அதிகரித்தது. தொடர்ந்து 77-ம் ஆண்டு காலப்பகுதியில் எமது சங்கத்தின் பெயர் கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கமென பெயர் மாற்றம் பெற்று அங்கத்தவர்களின் தொழிற்பாடும் அதிகரிக்கப்பட்டது. இந்நேரத்தில் எமது சங்கத்தின் அங்கத்தவர் 467 பேராக அதிகரித்தனர் அத்துடன் எமது சங்கத்தின் அங்கத்தவர் நல உரிமைகள் சார்ந்த சில நலத்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

தொடர்ந்து 84/85 காலப்பகுதியில் எமது சங்கத்தின் தொழிற்படு பிரதேசமானது கரைச்சி பிரதேச உதவி அரசாங்க பிரிவுகளை உள்ளடக்கியதான தொழிற்படு எல்லைகளை கொண்டதாக பிரதேசம் சுருங்கியுள்ளது அந் நேரத்தில் எமது சங்கத்தின் தொழிற்படு அங்கத்தவர் 768 ஆக அதிகரித்திருந்தது.

தொடர்ந்து எமது சங்கத்தின் நடவடிக்கைகள் மென்மேலும் விரிவடைந்து அங்கத்தவர்களின் பிற்கால நலத்திட்டமாக கட்டாய சேமத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து எமது சங்க நடவடிக்கைகள் விரிவடைந்து 91/92 காலப்பகுதியில் எமது சங்கத்தின் பெயர் கிளிநொச்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என பெயர் மாற்றம் பெற்றதுடன் எமது சங்கத்தின் தொழிற்படு பிரதேசம் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவும் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவும், ஆக மாற்றம் பெற்றிருந்தது இந் நேரத்தில் எமது சங்கத்தின் தொழிற்படு அங்கத்தவராக 947 அங்கத்தவர் அங்கீகரித்திருந்தனர் இக்காலப் பகுதியில் அங்கீகரித்த சங்கத்தின் வேலைத் திட்டங்களான வாகன சேவை பாரஊர்தியின் சேவையில் இணைப்பதற்காக கொள்வனவு செய்திருந்தோம் மேலும் எமது சங்கத்தின் வளர்ச்சிப் போக்கிலும் அக்காலத்தில் இருந்த அசாதாரண நெருக்கடியிலும் எமது மக்களின் துயர் துடைக்கும் நோக்கமாக கூட்டுறவின் வளர்ச்சியிலும், நெல் வியாபாரம், அரிசி வியாபாரம், பசளை விநியோகம் அத்துடன் சித்த வைத்திய சேவை அங்கத்தவருக்கிடையேயான கல்வி போன்ற வேலைத் திட்டத்துடன் பனை, தென்னை சார் உற்பத்திப் பொருட்களின் விற்பனையும் எமது மேலதிக நடவடிக்கைகளாக இணைத்துக் கொண்டோம்.

தொடர்ந்து எமது நடவடிக்கைகளாக 95/96 காலப்பகுதியில் உழவு இயந்திரமும் பெற்று அதன் மூலமான சேவையினையும் அங்கத்தவருக்கு வழங்கி இருக்கின்றோம் எமது சங்க வளர்ச்சியில் அங்கத்தவரிடையேயான நலத்திட்டங்களில் அங்கத்தவர்களின் ஒய்வூதியத் திட்டம் அங்கத்தவரின் விபத்துத் திட்டம், அங்கத்தவருக்கிடையேயான கல்வித் திட்டம், அங்கத்தவர்களின் பிள்ளைகளின் உயர்கல்வித் திட்டம் அங்கத்தவருக்கிடையேயான கடன் வழங்கும் திட்டம், சாதாரண சேமத்திட்டம், அங்கத்தவருக்கிடையேயான உற்பத்தித் திறனுக்கேற்ற போட்டி மூலமான பரிசில்கள் வழங்கல் போன்ற அங்கத்தவர் சார்ந்த நலத்திட்டங்களை மிகவும் சிறப்பாகவும் செம்மையாகவும் செய்து வருகின்றோம்

மேலும் எமது சங்க வளர்ச்சிக் காலத்தில் (91/92) சங்கத்திற்கென நிரந்தரமாக ஓர் வடிசாலையும் அதனுடன் இணைந்த சீனி உற்பத்தி நிலையமும் அமைத்துக்கொண்டோம் இதன் மூலமாக அங்கத்தவரிடம் இருந்து மேலதிகமாக பெறப்பட்ட கள்ளினை நிலத்தில் ஊற்றாது அதை மதுசாரமாக மாற்றி அதன் மூலம் சாராய உற்பத்தியினையும் விநியோகத்தினையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்நேரத்தில் எமது சங்கத்தில் 120க்கும் அதிகமான பணியாளர்களும 1350 ற்கும் மேற்பட்ட அங்கத்தவரும் இணைந்து கொண்டனர். மேலும் சங்கத்தின் பணியாளர்கள் தொடர்பில் அவர்களின் கூட்டுறவு சட்ட ஒழுங்கிற்கு அமைவான நியமங்களும் கூட்டுறவுப்பணியாளர் நல உரிமைத் திட்டங்களும் சீரான முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் குறிப்பாக எமது பணியாளரின் ஒன்றிணைந்த முயற்சியின் பணியாளர் நலன் புரிச்சங்கம் மேலும் சிறப்பாக நடாத்தி வருகின்றோம், இதன் மூலமாக எம்மிடமிருந்து ஒய்வு பெறும் பணியாளருக்குப், பணியாளரின் விசேட துக்க நிகழ்வுகளுக்கும் எம்முடனான இணைந்த ஒத்துழைப்பாக தலா 10001 ற்கு குறையாத பரிசில்களையும், உதவிகளையும் வழங்கி கௌரவித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்

### எமது சங்கத்தின் அமைப்பு முறை வருமாறு

1) அங்கத்தவர்
2) கிளை பொதுச்சபை
3) கிளைக்குழு
4) பொதுச்சபை
5) நெறியாளர் குழு
6) தலைவர்
7) பொது முகாமையாளர்
8) பணித்தொகுதி என்ற அமைப்பு ரீதியில் எமது சங்கம் நேரடியான அமைப்பினை உடையது. இவ் அமைப்பானது மாவட்ட மாகாண ரீதியிலான அமைப்பைக் கொண்டுள்ளது. அவ் அமைப்பு முறையானது

கி. இராஜகுலரோதயம்
பொது முகாமையாளர்

1) கிளிநொச்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம
2) கிளிநொச்சி மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்
3) வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (பனிணையம்)

இவ் அமைப்புடன் எமது நிறுவனம் கட்டுக்கோப்புடன் ஒழுங்குபட்ட நடவடிக்கைகளுடனும் செயற்பட்டு வருகின்றது

ஆரம்ப காலத்தில் எமது கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கின்ற வேளைகளில் சமூக ரீதியில் மிக நெருக்கலான நெருக்கடிக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது அப்போது இவ் அமைப்பைச் செம்மையாக செயற்படுத்திக் கொள்வதற்கு ஆரம்ப கால நடவடிக்கைகளில் தலைவர்கள், பொது முகாமையாளர்களின் அதிக முயற்சியின் பலனாக இந் நிறுவனத்தை வெற்றிகரமாக நடாத்தி வந்தனர் இதில் குறிப்பாக கூட்டுறவுத் திணைக்களத்தின் மிகப் பெரிய அளவினதான சட்ட ஆலோசனையுடன் இணைந்த வழிகாட்டலுடன் மிகவும் சிறப்பாக வழிநடாத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது,

# கிளி. தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் விழா

முத்தான முத்தமிழ் கலையை முழக்க எடுத்தியம்பும் கோலத்தில் உலகப் பெரும்புலவர் திருவள்ளுவர் விழா மிகச் சிறப்பாக கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தினால் கொண்டாடப்பட்டது.

ஸ்கந்தபுரம் இல 4 அ. த. க பாடசாலையில் கிளி. தமிழ்ச் சங்கத் தலைவர் க. ஆறுமுகதாசு தலைமையில் விழா நடைபெற்றது.

"வள்ளுவன் காட்டும் அறிவியல்" என்னும் பொருளில் பொன் கணேசமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன

# கரைச்சி வடக்கு கிளைக்குழு தேர்தல்

கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது அடுத்த கிளைக்குழு, பொதுச்சபை மற்றும் நெறியாளர் சபை என்பவற்றைத் தெரிவு செய்வதற்கு முன்னோடியாக அக்டோபர் 10, 11ம் திகதிகளில் 16 கிளை நிலையங்களில் கிளைக்குழுத் தேர்தலை நடாத்தி முடித்துள்ளன

# பனை தென்னை அ. கூ. சங்கம் மகேசுர பூசை

வன்னேரிக்குளம் அருள்மிகு ஐயனார் ஆலயத்தில் 46 வது பூசைத்தினமான பூங்காவனத் திருவிழா கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் வெகு சிறப்பாக நடாத்தப் பட்டுள்ளது

சங்கத்தின் அங்கத்தவர்கள் பணிப்பாளர்கள், பணியாளர்கள் இணைந்து நடாத்திய இவ் விழாவில் காலை 10.30 மணியளவில் பூசை மற்றும் அபிசேக ஆராதனைகளும், பகல் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டு மாலை திருக்கல்யாண வைபவமும் "சுவாமி பூந்தண்டிகையில் வீதியுலா வந்த காட்சியும் இடம்பெற்றது.

# யப்பான் உதவி

கூட்டுறவு வைத்தியசாலைகள் அமைக்கப்படுமாயின் அதற்கான நிதியின் ஒரு பகுதியை வழங்க யப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளதாக சிறிலங்கா கூட்டுறவு அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது. எனவே இதனைப் பயன்படுத்தி கூட்டுறவினூடாக வைத்திய சேவையையும் மக்களிடையே எடுத்துச் சொல்ல வேண்டும் எனவும் அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது

## தேங்காய் விற்பனை

கந்தபுரம் பகுதி வாழ் மக்களின் நன்மை கருதி கிளி/ ஊற்றுப்புலம் ப. நோ. கூ சங்கம் முல்லை மாவட்டத்தில் இருந்து தருவிக்கப்பட்ட தேங்காய்களை அதன் தலைமைப் பணிமனையில் வைத்து மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைசெய்துவருகிறது

## திருவிழா

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவ 4ம் திருவிழாவை கரைச்சி வடக்கு ப. நோ. கூ சங்கமும், பணியாளர்களும், பொறுப்பேற்று மிகச் சிறப்பாக நடாத்தினார்கள் அன்றைய தினம் தாகசாந்தி நிலையத்தை நடாத்தியதுடன், சமய சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

# கூட்டுறவுப் பணியாளன் நொத்தாரிசாக இருப்பது கூட்டுறவாளருக்கும் கௌரவம்

கூட்டுறவுப் பணிநிலை ஊழியன் நொத்தாரிசாகி இருப்பது கூட்டுறவுப் பணியாளர்களுக்கு பெரும கௌரவத்தை ஏற்படுத்தியுள்ளது

1997 இல் நடைபெற்ற நொத்தாரிசு இறுதிப் பரீட்சையில் விசேட திறமைச்சித்தி பெற்றுள்ளார்

பூநகரி ப நோ. கூ. சங்க வர்த்தக முகாமையாளரும் உதவிப் பொதுமுகாமையாளருமான தாமோதரம்பிள்ளை அரியரத்தினம் அவர்களே மேற்படி நொத்தாரிசு பரீட்சையில் சித்தி எய்தி கிளிநொச்சிமாவட்டத்தில நொத்தாரிசாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

1956ம் ஆண்டு பூநகரி செட்டியகுறிச்சியில் பிறந்து இளம் பருவத்திலேயே சிறந்த மாணவனாக திகழ்ந்தார்

1976ல் பூநகரி ப. நோ. கூ சங்கத்தில் எழுதுவினைஞராக இணைந்து கொண்டு தனது திறமையினால் பிரதம எழுதுவினைஞராக பதவி உயர்வு பெற்றார்.

1983 தொடக்கம் நொத்தாரிசு எழுதுவினைஞராக பகுதி நேரமாக கடமை புரிந்து 1994ல் நொத்தாரிசு ஆரம்பப் பரீட்சையில் சித்திபெற்றார். அவரது விசேட திறமையினால் 1997ல் நடைபெற்ற நொத்தாரிசு இறுதிப்பரீட்சையில் விசேட சித்தி பெற்றார்.

1980ல் இருந்து கடன் சந்தைப்படுத்தும் முகாமையாளராகவும் 1981ல் இருந்து உதவிப் பொது முகாமையாளராகவும், 1990ல் இருந்து வர்த்தக முகாமையாளராகவும் பணி புரிகின்றார்

தொடர்ந்து 23 வருடங்களாக, பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரிந்து அச் சங்கத்திற்கு பெருமை சேர்த்துக் கொடுத்திருக்கின்றார்,

சமூகப் பணிகளில் ஆர்வம் கொண்டு உழைக்கும் சிறந்த சேவையாளரான திரு தா. அரியரத்தினம் அவர்கள் மேலும் தனது பணியில் உயர்வு பெற வாழ்த்துகிறோம்.

(கலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் பிறந்த கதை

பூமியின் மூன்றில் இரண்டு பகுதி நீர் என்பது தெரியும். கடல் தோன்றிய கதை சுவாரசியமானது கடல்தோன்றிக் கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன கடலின் தோற்றங்கள் பற்றி உறுதிபடக் கூற முடியவில்லை.

ஆனால் நெடுநாட்களாக அறிஞர் பலர் சேகரித்துத் தந்த தகவல்கள் ஊடாக சிலவற்றை தெரிந்து கொள்ள முடிகிறது சூரியனில் இருந்து தெறித்து விழுந்த ஒருதுண்டே பூமி என்பது வானியலாளரின் கருத்து. தெறித்து விழுந்த பூமி அளவிட முடியாத வெப்பத்தையும், கோணமாக எரிந்த வெளியாய் சுழன்று கொண்டிருந்தது படிப்படியாக பூமியின் சூடு மெல்ல குறையத் தொடங்கியது சூடு குறையக் குறைய பூமியின் மேற்பரப்பு இறுக ஆரம்பித்தது. பூமியின் பரப்பில் வாயு ரூபத்தில் இருந்த பொருட்கள் திரவமாக மாறத் தொடங்கின ஆயிரக் கணக்கான ஆண்டுகள் செல்லச் செல்ல பூமியில் உள்ள நிலை மேலும் மேலும் குறையத் தொடங்கியது

திரவ ரூபமாக மாறிய பொருள் இலேசாக இறுகிக் கொண்டிருந்தது. அந்தத் திரவத்தை வெகு தொலைவில் இருந்து சூரியன் கவர்ந்திழுத்தது இப்படி இருந்த காரணத்தால் திரவப்பொருள் சுருண்டு கொதித்தது,

இந்த நிலையில் சில காலம் நீடித்தது நாளாக, சூரியனின் கவர்ச்சி இழுப்பு அதிகமான காரணத்தால் திரவமயமாக இருந்த பூமியின் சில பகுதிகள் பிய்த்துக் கொண்டு வெளிக்கிளம்பின இதனால் பூமியின் பிரமாண்டமான பள்ளங்கள் ஏற்பட்டன

பூமியில் இருந்து இழுக்கப்பட்டு வெளியேறிய துண்டுகளில் ஒன்றே சந்திரனாக மாறியது என்று வானியல் வல்லுனர்கள் கூறுகின்றனர் (இதை மறுப்பவரும் உண்டு) சந்திரன் தோற்றத்திற்கு பின் பூமியின் மேற்பகுதி நன்கு குளிர்ந்து இறுகியதால் பாறைகள் தோன்றின.

கிருஸ்ணன்
முழங்காவில்
மகாவித்தியாலயம்,

பூமியின் மேற்பகுதி கடினமாகிய பின் துரிதமாக குளிர்ச்சியடையத் தொடங்கிய போது பூமியின் மேல் பிரமாண்டமான மேகங்கள் தோன்றின நாட்கள் செல்லச் செல்ல மேகங்கள் அடுக்கடுக்காய் பெருகின பெருகிய மேகங்கள் பூமிக்கு மேல் அந்தரத்தில் உலாவின. குளிர்ச்சி ஒரு எல்லையை எட்டிய போது மேகங்களில் இருந்து நீர் கொட்டத் தொடங்கியது. மழை என்றால் பேய் மழை. நாட்கள், மாதம், வருடக்கணக்கில் பெருமழை பெய்த வண்ணமாக இருந்தது பூமியின் மீது விழுந்த பெரு மழை நீர் நிலப்பரப்பில் உள்ள உப்புச் சத்துக்களை கரைத்துக் கொண்டு பூமியின் பிரமாண்டமான பள்ளங்களில் சென்று தேங்கியது. இந்த நீர் தேக்கத்தைத்தான் கடல் என்கிறோம் இந்தக் கடல் உருவாக ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பிடித்தன இன்று கடலுக்கு வயது 250 கோடி ஆண்டு ஆகும்.

# செயற்கைக்கோள் தரும் புதிய சாதனை

முதுகில் மினி கம்பியூட்டர், மணிக்கட்டில அதன் சாவிப் பலகை. காதில அதன் மைக்ரோஃபோன் இதை மாட்டிக் கொண்டால் முழுக் குருடர்களும் உலகில் எங்கு வேண்டுமானாலும் யாருடைய துணையுமின்றி தனியாக பயணம் செய்யலாம்.

G.P.S குளோபல் பொசிசனிங் சிஸ்டம் என்ற செயற்கைக் கோள் அனுப்பும் தொடர்ச்சியான தகவல் மூலம் இந்த கம்பியூட்டர் உலகின் எந்த இடத்தையும் அட்ச, தீர்க்க ரேகைகளை மீட்டர் துல்லியமாக காட்டிவிடும் உடனே:

கம்பியூட்டர் தன்னிடமுள்ள வரைபடத்தை ஒப்பிட்டு அவர்கள் செல்லவிரும்பும் இடங்களை. அடையாளங்களை ஒலி மூலம் காதல் வழங்கும்


கருவியின் பெயர் மோபிக் பிர்மிங்காம் பல்கலைக்கழகம் இதை தயாரித்திருக்கிறது சோலால் தடவும் குருடர்களுக்கு இது பெரும் வரப்பிரசாதமாகும்

# வலியில்லாத ஊசி போட வேண்டுமா?

கீலியம் வாயு அழுத்தத்தினால் மணிக்கு 2700 கி மீ வேகத்தில் மருந்து பீய்ச்சியடிக்கும் துப்பாக்கியை Boc கேஸ் கம்பெனி தயாரித்ள்ளது.

இத் துப்பாக்கி மூலம் தோலுக்குள் மருந்தாகவும், பவுடராகவும் வலியில்லாமல் செலுத்தலாம் எயிட்ஸ் போன்ற செடிய நோய்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும். பவுடர் ஜெட்பார்மசி யூட்டிகல்கம்பெனி இதை விற்பனைக்கு விடுகிறது

# "சங்கமம்" குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் - 2




இடமிருந்து வலம்

இலக்கம் 1 - மக்கள் திலகம் எம். ஜி. ஆர் நடித்த நூறாவது திரைப்படம்

இலக்கம் 13- அன்னம், இரத்தம் அன்பளிப்பாக வழங்குவது போல பொருத்தமில்லாத தாலியும் வழங்கப் படுவது இந்தப் பெயரில் ஒரு திரைப்படம் உண்டு (குழம்பியுள்ளது)

இலக்கம் 21 - நினைவாற்றலை இப்படி அழைப்பர்

இலக்கம் 27 -காவடிபோன்ற ஒரு ஆட்டம்செம்பையோ குடத்தையோ தலையில் சுமந்து ஆடுவது - குழம்பியுள்ளது

இலக்கம் 31 - பாதை என்பதன் ஒத்த சொல்

மேலிருந்து கீழ்

இலக்கம் 1 - உதவியுடன் சேர்ந்து வரும் ஒத்த சொல்

இலக்கம் 3 - இதன் அதீத வளர்ச்சி இன்றைய உலகின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் வழி கோலுகின்றது (குழம்பியுள்ளது)

இலக்கம் 5 - பயத்தினால் மனதில் ஏற்படுவது "மயக்கமா மனதிலே குழப்பமா" என்கிறது ஒரு பழைய பாடல் (தலைகீழாகி குழம்பியுள்ளது)

இலக்கம் 16 - மிருகங்களைப் போல் மனிதரை கொன்று பூசைக்கு பயன்படுத்துவதை இப்படி அழைப்பர் (தலை கீழாகியுள்ளது)

இலக்கம் 24 - பாரம்; ஒத்த சொல் பெரியோரை மதித்தலையும் இப்படி அழைப்பர் (குழம்பியுள்ளது)

தயாரிப்பு:- V. K காந்தன்

# நான்கு தகவல்கள்

★ உலகிலே அதிக எழுத்துக்களைக் கொண்ட மொழி
கம்போடியா மொழி

★ குறைந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி
ஹவாய்

★ அதிக சொல் வளத்தைக் கொண்ட மொழி
ஆங்கிலம்

★ ஆங்கிலத்தில் அதிகமாக பயன்படும் எழுத்து
E

தொகுப்பு:-
யோ. சாந்தசிலன்
கிளி-மாவட்ட கூ-வு ஒன்றியம்

# வாழை தரும் உயர் ரக காகிதம்

வாழைப்பட்டை நார்களிலிருந்து பெறப்படும் கூழிலிருந்து உயர் ரக காகிதங்களை பெறமுடியும் என ஜோர்ஹார்ட்(அச்சாம்) C.S.R பரிசோதனைக் கூடம் தனது ஆய்வின் மூலம் நிரூபித்துள்ளது.

அதுமட்டுமன்றி ட்வைன் நூல், கயிறு போன்றவைகளும், தயாரிக்கலாமென மேலும் கூறியுள்ளது.

# தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்

தமிழ்நாட்டில் அண்மையில் நூறு தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றுகூடி தங்கள் படைப்புக்களை வெளிக்கொணர வேண்டுமென்ற பேராவலில் உந்தப்பட்டதன் விளைவாக; "தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்" உருவாகியுள்ளது.

இதன் மூலம் எழுத்துலகை விரும்பும் படைப்பாளிகளின் ஆக்கங்கள் நூலுருப் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

தங்களால் படைக்கப்பட்ட ஆக்கங்களை வெளிக்கொணர்ந்து சமூகத்திற்கு உறுதுணையாக இருக்கமுடியவில்லைஎன ஏக்கமுற்ற வறிய எழுத்தாளர்களுக்கு மிகவும் மகிழவூட்டும் செய்தியாகஇது அமைந்துள்ளது.

## அஞ்சல் வழி கூ. கல்வி

கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தவர்களாக இருப்பவர்களுக்கு அஞ்சல் வழியாக கூட்டுறவுக் கல்வியை போதிக்க தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது

இதன் மூலம் அங்கத்தவர்கள் கூட்டுறவு பற்றிய தெளிவான கருத்துக்களைப் பெறுவார்கள்.

இது தனிமனிதனது சமூக பொருளாதார நிலைகளை கூட்டுறவால் மேம்படுத்த முடியுமென்ற கொள்கையை நிலைநாட்ட ஏதுவாகஇருக்குமென நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# அறிவியலைத் தேடுவோம்

1 தொலைக்காட்டியை (ரெலஸ்கோப்) கண்டு பிடித்தவர் யார்?
கலிலியோ கலிலி

2, மலைநாட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் வேளாண்மை முறை எது?
படிமுறை வேளாண்மை

3, எஸ்கி மோவரின் வீடு எவ்வாறு அழைக்கப்படும்?
இக்ளு

4, இத்தாலிய சர்வாதிகாரி யார்?
முசோலினி

5. 366 நாட்களைக்கொண்ட ஆண்டு எவ்வாறு அழைக்கப்படும்?
நெட்டாண்டு (லீப் வருடம்)

6. சூரியன் புவியிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது?
சுமார் 150 மில்லியன் கிலோமீற்றர்

7, உலகின் மிகப் பெரிய ஆழி எது?
மரியானா ஆழி

8 குளிர் நாடுகளில் எவ்வகையான ஆடை பயன்பாட்டில் உள்ளது?
கம்பளி

9. இலங்கையின் ஆதிக்குடிகள் யாவர்?
இயக்கர், நாகர்

10 மின்சார ஓட்ட வேகத்தை அளக்கும் அலகு எது?
வோல்ற்

# நூல்களும் இயற்றியவர்களும்

| | |
|---|---|
| பெரியபுராணம் | - சேக்கிழார் |
| கந்தபுராணம் | - கச்சியப்ப சிவாச்சாரியார் |
| திருவிளையாடல் புராணம் | - பரஞ்சோதி முனிவர் |
| திருக்குறள் | - திருவள்ளுவர் |
| பாரதம் | - வியாசர் பெருமான் |
| இராமாயணம் | - வால்மீகி |
| சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| சைவ வினாவிடை | - ஆறுமுக நாவலர் |
| நற்சிந்தனை | - யோகர் சுவாமிகள் |
| பாஞ்சாலி சபதம் | - பாரதியார் |
| ஆத்திசூடி, கொன்றை - வேந்தன் | - ஒளவையார் |

தொகுப்பு; கீ. நிறஞ்சினி
தரம் 10
முழங்காவில் மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தர வளர்ச்சி நோக்கி உதைபந்தாட்டம்

நம் உதைபந்தாட்ட வீரர்கள் உலகத் தரத்தையடைவதற்கு வேகமும் வலிமையும் அவசியம் என இம்முறை உலகக்கிண்ணப் போட்டிகள் நிரூபித்திருக்கின்றன.

ஒரு செக்கனில் நமது இலங்கை, இந்திய வீரர்கள் 9 மீட்டர் தூரமே தாண்டும் வேகத்தையே உச்சமாகக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் உலகதரத்தில் உள்ள வீரர் ரொனால்டோ செக்கனுக்கு 28 மீட்டர் வேகத்தை ஆட்ட நேரங்களில் காண்பிக்கிறார்.

இதே போன்று எமது வீரர்களின் பந்து உதைக்கும் வேகம் மணிக்கு 50 மைல்களைத் தாண்டவில்லை. ஆனால் ரொனால்டோவோ மணிக்கு 90 மைல் வேகத்தில் பந்தை உதைக்கிறார்.

எனவே தான் எமது வீரர்கள் ரொனால்டோ போன்ற உலக வீரர்களை தமது உதைபந்தாட்ட வியூகங்களுக்குள் தடுத்து நிறுத்தவோ அல்லது அவர்களின் வியூகங்களை உடைத்துக் கொண்டு பந்தைக் கொண்டு சென்று கோல் போடவோ முடியாது நிற்கின்றனர்.

உலக உதைபந்தாட்ட தர வரிசையில் இந்தியா, இலங்கை என்பன 1?5வது இடத்திலும் அதற்குப் பின்புமே உள்ளன என இந்திய உதைபந்தாட்ட நிபுணர் திரு ஜோர்ஜ் புளுஸ் தெரிவிக்கிறார்.

எமது வீரர்கள் வலிமை (Strenth) வேகம் (Speed) தாக்குப்பிடிக்கும் திறன் அல்லது களைப்பைத் தாங்கும் திறன் (endurance) விளையாட்டு நுட்பம் (Technics) நெகிழும்திறன் (Agility) மற்று தந்திரோபாயம் (tactics) என்பவற்றில் வளர்ச்சியடைய வேண்டும். இவற்றில் எமது ஆசிய 'டெக்லேசியன்' இன மனிதர்களில் வேகமும், வலிவும் அதிகரித்தல் என்பதே எமது விளையாட்டு வளர்ச்சிக்கு அவசியமாகும்.

நாம், சர்வதேச போட்டி நுட்பங்கள், விதிகள் என்பவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டே இன்னும், உதைபந்தாட்ட மைதானத்துக்குள் (லைனுக்குள்) நின்று விளையாட்டைப் பார்ப்பதையும், வெற்றி தோல்வி தீர்மானிக்கும் பனால்டி உதைப்போட்டியை மைதானத்துள் நின்று பார்ப்பதையும் மரபாக்கியுள்ளோம், எனவே எமது முன்னேற்றத்துக்கு நீண்ட தூரம் உள்ளது

சஞ்சிகா

# இலக்கியம் என்பது....

இலக்கியம் ஒரு சமூகக் கலை ஒரு சமூகச் செயற்பாடு அதற்கு ஒரு சமூகப் பற்று இருக்கிறது சமூக உலகத்தின் மீதும் சமூக இயக்கத்தின் மீதும் அது தாக்கத்தை விளைவிக்கிறது சமூக மாற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்குகிறது

மனித விழிப்புணர்விற்கும் விடுதலைக்கும் பாதை அமைத்துக் கொடுப்பதே இலக்கியத்தின் உன்னதமான இலட்சியமாக அமைய வேண்டும்

குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் எழுத்தாளன் வாழ்கிறான் தான் வாழும் சமூகத்தையும், அந்த சமூகத்தின் வாழ்நிலைப் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் படைப்பாளி உதாசீனம் செய்ய முடியாது வரலாற்றில் இருந்து அவன் ஒளித்துக் கொள்ள முடியாது அவன் எழுத வேண்டும் அவனது எழுத்து சமூகத்தின் வாழ்நிலையை ஊடுருவி நிற்க வேண்டும் சமூகத்தை சிந்திக்கத் தூண்டி செயற்பட வைக்க வேண்டும்

இந்த வகையில் எழுத்தாளனுக்கு சமூகப்பற்றுணர்வு அவசியம் அர்ப்பணிப்பு அவசியம். ஈடுபாடு அவசியம் எழுத்து அரசியல் ஈடுபாடுடையதாக அமைய வேண்டும்

சமூக விடுதலைக்கான சமூகப் பிரக்ஞையுடன் எழுதுபவன் தனது இருப்பிற்கும் மற்றவர்கள் வாழ்வுக்கும் அர்த்தத்தை கொடுக்கிறான்

'What Is Literature?'" - Jean Poul Sartre -

(நன்றி - வெளிச்சம் - பிரம்மஞானி)

## சவப்பெட்டிக்கோர் விண்ணப்பம்

சவப் பெட்டிகளாய்
கொண்டு வந்து தாருங்கள்
பட்டினியில் சாபவன்
அதனையாவது பயன்படுத்தட்டும்
பட்டினி தொடர்பான
புள்ளி விபரங்கள்
தந்துள்ளோம்
அதனை இதற்கேனும்
பயன்படுத்துங்கள்
சவப்பெட்டி
non - food It-m தானே
மனிதாபிமான நோக்கில்
எம் மண்ணில் பணி புரியும்
சர்வதேசக் கனவான்களே!
பிணம் தின்னும் சாத்திரங்களால்
பேய் அரசு செய்கிறது
சவப்பெட்டிகள் கொண்டு வர
உங்களை அனுமதிக்கும்
உணவு கேட்டு
உங்கள் வாசலில்
காத்திருப்போர் பற்றிக்
கவலைப்பட வேண்டாம்
இன்னும் சில நாட்கள்
காத்திருங்கள்
அவர்கள்
வீதிகளில் வீழ்ந்து மடிவார்கள்
நாய் தின்னும். காக்கை தின்னும்
ஏன் கழுகுகளும் தின்னும்
எடுத்துப் புதைக்கும்
வலுவின்றி
எலும்புக் கூடுகள்
வீதிகளில் அலையும்
சர்வதேச ஊடகங்களில்
புகைப்படங்கள்
நல்லவிலை போகும்
எத்தியோப்பியா ருவாண்டா
வரிசையில்
உங்கள் அறிக்கைகளால்
சிறிலங்காவும் சேரும்
அதுவரை காத்திருங்கள்
பேசாசாக்கின்மையில் இப்போ.
இங்கே மடிபவர்க்கு
மடிந்தால் உங்கள்
Non Food Item கோட்டாவில்
சவப்பெட்டிகளை வழங்குங்கள்

- தர்சிகா -
(உருத்திரபுரம்)

# ஓர் ஆய்வு பற்றிய நோக்கு

## உரச்செலவை அரைவாசியாக்கும் வேப்பம் விதைத்தூள் பிரயோகம்

தமிழ்நாடு கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகத்தில் வேப்பம்விதைத் தூள் உடன் யூரியா உரத்தைக் கலந்து சோதனை ஒன்று மேற்கொண்டார்கள்.

இதில் யூரியா நைதரசன் இறக்கம் மூலம் விரயமாவது தடுக்கப்பட்டது அவதானிக்கப்பட்டது இதே பரிசோதனை அமோனியாக் கலவையுடனும் மேற்கொள்ளப்பட்டு அதே விளைவு அவதானிக்கப்பட்டது, எனவே வேப்பம்விதைத்தூள் இடப்பட்ட போது அரைவாசி அமோனியாப் பிரயோகத்துடன் சிறப்பான வளர்ச்சியை பயிர்காட்டியது. இதனால் 50 சதவீத உரச் செலவு குறைக்கப்பட்டது நிருபிக்கப்பட்டுள்ளது

இதேவேளை வேப்பம் பிண்ணாக்கு இடப்பட்ட மண்ணின் பயிர்களில் பூச்சிப பீடைகளின் தாக்கமும் நான்கு மாதங்கள் வரை இல்லாதிருந்தது அவதானிக்கப்பட்டது எனவே வீணாகும் வேப்பம் விதைகளை தூளாக்கி விவசாயிகள் உபயோகிப்பாரயின் பொருண்மியத்தடை காரணமாக உரத்தடை, பீடை நாசினிக்கான அதிகரித்தசெலவு என்பவற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஈடு செய்யும் பொருத்தமான தொழில்நுட்ப முறைகளாக அமைந்து பயன்பெறுவர்

இவ்வாறாக எமது பொருளாதாரத்துக்கு உதவும் முறைகளையும், வழிகளையும் நடைமுறைப் படுத்தும் செயன்முறைகளையும் எமது பொருண்மிய அபிவிருத்தியில் அக்கறையுள்ள அனைவரும் இணைந்து செயற்படுத்தவேண்டும், (அ — அ)

## சர்வதேச மிருகங்கள் தினம்

ஒக்டோபர் மாதம் 4ம் திகதி சர்வதேச மிருகங்கள் தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது மேற்படி தினத்தில் மிருகங்களை கொல்வது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது

செ றெனேஸ்

## சிறுவர் ஒலிபரப்பு தினம்

டிசம்பர் 13-ம் திகதியை சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு தினமாக "யுனிசெப்" பிரகடனப் படுத்தியுள்ளது

சிறுவர்களின் அபிலாசைகளை தகவல் ஒலிபரப்பினூடாக உலகச் சிறுவர்கள் பகிர்ந்து கொள்ள இந் நாள் உதவும் என யுனிசெப் மேலும் தெரிவித்துள்ளது.

## ஆசிரியர் பயிற்சிப் பட்டறை

போரூட் நிறுவனத்தின் அனுசாணையுடன் தொண்டர் ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஒன்பது நாட்கள் நடைபெற்றது.

# கிளி / கூட்டுறவுக் கல்லூரி சாதாரணதர பரீட்சை முடிவுகள்!

கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியால் 1998 ஜனவரி — ஜூன் காலப்பகுதிக்கு நடாத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரணப் பயிற்சி நெறியின் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன இப் பெறுபேறு தொடர்பான விபரம் வருமாறு

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றிய பயிற்சியாளர்கள் | |
| பூரண சித்தி அடைந்தோர் | — 17 |
| நாணசித்தி ,, | — 08 |
| சித்தியின்மை | — 03 |
| 2-ம் பிரிவில் சித்தி பெற்றோர் | — 07 |
| யோ. சாந்தசீலன் | — 3A, 8B |
| க கீதா | — 2A, 4B |
| யு. ஜெயக்காந்தன் | — 6B |
| த. மலர்வதனி | — 2A, 2B, 2C |
| செ. தயாநிதி | — A, 2B, 3C |
| பா. சந்திரலேகா | — A, 2B, 3C |
| க சசிக்குமார் | — A, B, 4C |
| 3-ம் பிரிவில் சித்தி பெற்றோர் | — 10 ஆகும் |

என கிளி மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பரிசுத்திட்டம் தடைவிதிப்பு

தமிழ் நாட்டில் இருந்து வெளியிடும் சஞ்சிகைகள் தீபாவளி மலருக்காக அதிக போட்டிப் பரிசுத் திட்டங்களை அறிவித்தது இதற்கு தமிழ்நாடு அரசு தடை விதித்துள்ளது இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ்நாடு முதலமைச்சர் குடும்பத்தினரால் வெளியிடப்படும் குங்குமம் வார இதழ் தான் அதிக பரிசுத் திட்டங்களை அறிவித்துள்ளது. போட்டி, பரிசு, சீட்டிழுப்பு போன்றவை தமிழக அரசுக்கு மட்டுமே உரித்துடையது என தமிழக அரசு கூறியுள்ளது.

## 'வெற்றி மனை' திறப்பு

பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தால் "வெற்றி மனை" என்னும் பெயரில் மன நிலை பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பராமரிப்பு இல்லமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது

மனநிலை பலவீனப்பட்டதால் பாதிப்புக்குள்ளான இருபத்தைந்து பெண்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது

## "SPARK" கூட்டுறவு அமைப்பு தொடங்கப்பட்டது

தரமான விதைகள் பயனாளிகளுக்கு வழங்கி அதிக விளைச்சலைப் பெற வேண்டுமென்ற நல்ல நோக்குடன் "SPARK" (ஸ்பார்க்) என்ற கூட்டுறவு அமைப்பு ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தரமான விதைகள் தருவித்து வழங்க உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது

## இரஷ்சியப் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி

இரஷ்சியா அதிபர் பொறிஸ் ஜெல்சின் கடும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். இரஷ்சியப் பொருளாதார நிலையும் மிக வீழ்ச்சி நிலையில் உள்ளது. இதனால் நாடும் நோயாளியாகி விட்டது. அதிபர் ஜெல்சினும் நோயாளியாகிவிட்டார் என நோக்கர்கள் வேடிக்கையாக குறிப்பிட்டுள்ளனர்

## ஒரு நாள் வருவோம்

சூரியக்கதிர்களால் - எம்மை
சுட்டெரித்த பயில்வான்களே
வாடிவதங்கி வலுவிழந்து
வன்னியுடன் எம கதை
முடியுமென்றா நினைத்தீர்கள்
வேர் விட்டு விழுதெறிந்த
ஆலமரமென வளர்வோம்
விடியுமெம் தேசத்தில்
கரிகாலன் படை வரும்முன்னே - அன்று
அணிவகுத்து நாம் வருவோம் பின்னே

காவலூர் செல்வம்

## உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் 06

உலகம் வியக்கும்
மானுடத்தை உருவாக்கும்
ஞான ஞாயிறுகள் வாழ்க!
இளம் மொட்டுக்களாம்
எம்மினிய மழலைகள்
மலர்ந்து மலர்வனமாக
உழைக்கும்
காலைக் கதிரோன்கள்
தாழ் பணிவோம்
அறிவுச் சுடர் பரப்பும்
ஞாயிறு போன்றதும்

- சங்கமம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமானதோர் விளையாட்டுப் போட்டி

## வலுவிழந்தோர் விளையாட்டு நிகழ்வு

ஊனம் எங்கள் உள்ளத்தைத் தொடவில்லை. எல்லோரையும் போலவே எங்களாலும் வாழமுடியும் "எனும் ஆசியுரையுடன் விழா தொடக்கி வைக்கப்பட்டது. ஆசியுரை வழங்கியவர் அருட் திரு. சகாயதாசன் அடிகளார் மெல்லிசைப் பின்னணியில் 'ஒலிம்பிக்' தீபம் ஏற்றப்பட்டு பல்வேறு வகையான வலுக்குறைபாடுடைய போட்டியாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. ஊன்றுகோல், முச்சக்கரவண்டி வெள்ளைப் பிரம்பு ஆகியவற்றின் உதவிகளுடன் பல்வேறு வகையான வலுவிழந்த போட்டியாளர்கள் ஓடிக் கொண்டிருக்கையில் கசியும் விழிகளுடனும் நெகிழ்ந்துபோனமனித முகங்களுடனும் பார்வையாளர்கள் காணப்பட்டனர்.

> நெஞ்சை நெகிழ வைத்த இவ் வலுவிழந்தோரின் போட்டிகள். அவர்களின் உள ஆற்றலை எடுத்துக்காட்டியது. எமது சொந்தச் சகோதரர்களான இவர்களின் துயரமான வாழ்க்கையை உணர்ந்து கொள்ள முடியாது இருந்த எங்கள் நிலைப்பாட்டிற்காக, ஒரு கணம் வெட்கப்பட வைத்த இப் போட்டிகள் எமது பகுதியில் வலுவிழந்தோருக்காக வைக்கப்பட்ட முதலாவது போட்டியாகும்.

மஞ்சள் ரீசேட், சிவப்பு காற்சட்டை அணிந்த நிலையில் வரிசையில் நின்று போட்டியாளர்கள் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகத்தின் அங்கத்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டி கரைச்சி, கண்டாவளை, பூநகரிப் பிரிவுகளுக்கிடையேயான போட்டியாக நடைபெற்றது.

கிளி—பாரதி வித்தியாலய மைதானத்தில் கிளிநொச்சி செயலக திட்டப் பணிப்பாளர் திரு பொன் நித்தியானந்தன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு பொன்சபாபதி, மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. சு கனகராஜா, கரைச்சி தெற்கு ப. நோ கூ சங்கத் தலைவர் திரு சிவஞானம், அருட்சகோதரி லூட்ஸ்யோசெப் பாடசாலை அதிபர் திரு கனகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்

வலுவிழந்த பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள், ஊன்றுகோல் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், முச்சக்கரவண்டியோட்டம், பார்வையற்றோருக்கான நூல் பிடித்தோட்டம் என பல்வேறு வகையான போட்டிகளில் வலுவிழந்தோர் தமது திறமைகளை வெளிக்காட்டினர் வீதி நிகழ்வுகளான மரதன். சைக்கிள் ஓட்டம். முச்சக்கர வண்டி ஓட்டம் என்பன வன்னேரியில் இருந்து அக்கராயன் வரை வீதிவழியே இடம்பெற்றது.

போட்டியின் இறுதி நாள் நிகழ்வின் இடைவேளை நிகழ்வில் வினோத உடை நிகழ்வு இடம் பெற்றது. வினோத உடை நிகழ்வில் மூலிகைத் தோட்ட காட்சியாளர் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். பல்வேறுவகையான வினோத உடை நிகழ்வுகள் இடம்பெற்றன அடுத்ததாக நடன நிகழ்வொன்று இடம்பெற்றது. கண்கவர் நிகழ்ச்சியாக இடம் பெற்ற இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் இருவர் செவிப்புலனற்றவர் ஆவர்.

திரு. தவச்சந்திரன் என்பவர் கடந்த வருடம் யப்பானில் நடந்த சர்வதேச முச்சக்கர வண்டி மரதன் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட இலங்கையராவர் இவரைப் பயிற்றுவித்து அனுப்பி வைக்க இச்சங்கம் பெரிதும் உழைத்தது.

யுத்தம் இவ்வளவு தொகையானோரை, ஊனமுற்றோராக்கியதா? எனும் கேள்வி பலருள் எழுந்தது. ஊனமுற்றோரை அவர்களுக்கான அடிப்படை உதவிகளுடன். சுயதொழில் வாய்ப்பு உதவி, கல்வி வசதி என்பவற்றையும் இச்சங்கம் ஏற்படுத்திக் கொடுத்ததை இதன் அங்கத்தவர்கள் இடைவேளையின்போது இடம்பெற்ற நேர்காணலில் தெரிவித்தனர்.

இத் தாபனத்தை உருவாக்கி வளர்ப்பதில் அரும்பணியாற்றிய அருட் சகோதரி லூட்ஸ் திரு பொன் நித்தியானந்தன் ஆகியோரின் சேவைகளை நிர்வாக உத்தியோகத்தர் திரும அன்ரன் நினைவு கூர்ந்தார்.

இப்போட்டிகளின் போது சிறப்பான முறையில் ஒழுங்கமைப்புகளை மேற்கொண்ட பரியோவான் படையணியினதும் அதன் நிர்வாக உத்தியோகத்தர் திரு குலராஜன் அவர்களின் சேவையும் பாராட்டக்கூடிய வகையில் அமைந்திருந்தது

(தொகுப்பு அ—அ)

## போரின வெற்றியே எம் படையணியின் மூலதனப் பெருக்கம்

ஊர் உறங்கும் நேரம்!
சாமக் கோழி கூவி அடங்கிய
பின்னிருட்டு - அரச
அரக்கர்களின் கண்ணில் மண் தூவி!
படைப்பலமுள்ள இனத்தின்
காவச் சுவடுகள் நகர்ந்தன!
ஆட்காட்டி குருவிகள் கத்தித்
திரிந்து அலைந்தது
மனிதப் புதைகுழிகள்
அவசரமாக வரவழைத்தது
இனத்தின்
கனத்த காவல் தெய்வங்கள்!
வெற்றியை உற்பத்தி செய்ய
கரிகாலன் தலைமையில்
புரட்சிகர உணர்வுகளை
தட்டி எழுப்பி
நம்பிக்கை மட்டுமல்ல - அதை
நிறைவு செய்ய, புலிச் சேனை!
கிளி - நகரை - ஊடறுத்து புகுந்தது
மண்ணுடன் - விண்ணும் அதிர்ந்தது
வட தமிழீழத்தின்
பொருண்மியத்தின் இருப்பிடம்
பச்சை வயல்வெளி,
அலங்கரிக்கும் வாய்க்கால்
தென்னை, பனை, - அழகிய கமுகு
மா, பலா, - எல்லாம்
உன் காவலரண்கள்
அபகரித்த மண்ணை ஒரு சில நாட்களில்
தமிழரின் சேனை தனதாக்கியது
கிளி நகரை உலகம்! அறிந்து வியந்தது
வரலாற்றுத் தளும்புகள்
நிறைந்த எம் மண் இனி
பூக்கும் காய்க்கும் குலுங்கும்
புதுப் பொலிவுபெறும் புன்னகைக்கும்
களம் புகுந்த - தமிழர்
சேனை அணிவகுத்து நிற்க
பலநூறு மக்கள்
மனம் உறுதி எடுத்தவர்களாக
பகை வரினும் பணியோம் என
பட்டொளிவிட்டு பறந்தது தேசியக்கொடி—
தலை நிமிர்ந்து நின்றவர்கள்
புலிக்கொடிக்கு தலைவணங்கி
பூ தூவி நின்றனர்
ஓயாத அலைகள் தொடரும் -
போரின் வெற்றியே
எம் - படையணியின் மூலதனப் பெருக்கம்

காணகன்


கௌரி பல்பொருள் வாணிபம்

நுகர்ச்சியாளருக்கு ஓர் நற்செய்தி

எங்களிடம்
வட்டப்பம உதிரிப்பாகங்கள்
ஈ நுறுளி உதிரிப்பாகங்கள்
மற்றும்
பலசரக்குப் பொருட்கள்
மலிவாகப் பெற்றுக் கொள்ள
இன்றே வாருங்கள்

கௌரி
பல்பொருள் வாணிபம்

மன்னார் வீதி,
முழங்காவில்.



கரைச்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்

குறுகிய கால வளர்ச்சியில் நுகர்ச்சி, நிவாரண, விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், வெதுப்பக உற்பத்திகள், எண்ணெய் பிழிதல் தொழிலுடன், விசேடமாக உள்ளூரில் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கவும், அன்னியச் செலவ‌ணியை மீதப்படுத்தும் புதிய வேலைத் திட்டமான கே. ஈ. கோப் பீடிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

காலத்தின் தேவையறிந்து
கூட்டுறவுக் கொள்கைக்கமைய
இன்னும் பல திட்டங்களை
நடைமுறைப்படுத்துகிறது

கரைச்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
வட்டக்கச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம்
# SANGAMAM

ஆறு 2 அருவி 1
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி செப்டெம்பர் 1998


## சவாலை சமாளிப்போம்

நிவாரணம் வெட்டாம்? இனி நிவாரணம் தர மாட்டார்களாம்? உணவுப் பொருள் வராதாம்? போகிற போக்கைப் பார்த்தால் ஒருத்தருக்கும நிவாரணம் கிடையாதாம்? நிவாரணம் வேணுமெண்டா மன்னாருக்கு வரட்டாம்? இனி என்ன பட்டினிச் சாவு தான்? இன்னும் எத்தனையோ?— !

இதுதான் நம் காதில் அதிகம் விழும் சொற்கள்

ஓ பெ மக்கள் மனதில் ஒரு ஏமாற்றம்' அங்கலாய்ப்பு நிவாரணம் இல்லாவிட்டால் வாழ்க்கையே முடிந்து விட்டது போன்ற பிரமை

இயல்பாகவே பழகிப் போய்விட்ட வாழ் நிலையில் இருந்து மீள முடியாத நெருக்கடி;

இந் நிலை தொடர வேண்டுமா? ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்புக்களிலிருந்தும் விலகி நின்று வேடிக்கை பார்க்க முடியுமா?

நிவாரண வெட்டிற்கு எதிரான மக்கள் போராட்டம் தொடரட்டும். அது வெற்றி பெறும் வரை தொடரட்டும்

ஸ்ரீலங்கா அரசின் புலிகளுக்கெதிரான போரி வலு விழந்து வருவதனால் தமிழ் மக்கள் மீது அரசு உணவுப்போரை திணிக்கிறது என அரசியல் பார்வையாளர்கள் மதிப்பீடு செய்கிறார்கள்

அப்படியானால் எங்களுக்கு என்ன வழி?

உணவு நெருக்கடிக்கு தீர்வு காண முடியுமா?

உற்பத்தித் திறனில் நம்பகத் தன்மையை இழந்து விட்டோமா?

எமது உணவை நாமே தேடிக் கொள்ளும் நிலை என்று தோன்றுமோ?

ஜப்பானிய மக்களின் கடின உழைப்பு பாடம் கற்றுத் தருமா?

இவ்வாறு பல கேள்வி இன்று எழுப்பப்படுகின்றன.

திட்டமிடலும், கடின உழைப்பும் இணைந்தால் எல்லாம் சாத்தியமே! என பொருளாதார வல்லுனர்கள் அழுத்திக் கூறுகிறார்கள்.

வேக மேம்பாட்டுக்கு கட்டாயப்படுத்தும் மிக முக்கியமான மூல வளத்தை எமது மண் கொண்டுள்ளது.

அறிவில் சிறந்த வல்லுனர்களும் பெருமளவு ஆற்றலும் ஆர்வமும் கொண்ட மனித மூல வளம் என்னும் பெரும் செல்வம் எம் மண்ணில் நிறைந்திருக்கிறது

இப்போது நாம் செய்ய வேண்டியது என்ன?

உழைப்பு, கடின உழைப்பு, உறக்கமற்ற உன்னதமான உழைப்பு;

கால் பரப்பு நிலம் கூட தரிசாக உறங்காத உழைப்பு.

உற்பத்தி திறனை ஊக்குவிக்க அரச அரசசார்பற்ற; கூட்டுறவு; தனியார் நிறுவனங்கள் தாராள நிதி உதவியை பயனாளிகளுக்கு வழங்க வேண்டுமென்பது மக்கள் எதிர்பார்ப்பு நிதியற்ற ஒரு குடும்பம் தன் சிறு நிலத்துண்டை கூட உற்பத்திக்கு ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்படுமானால் அதன பின் விளைவுகள் பாரதூரமானதாகவே இருக்கும்.

தற்கால உணவுச் சூழல் அனைவருக்கும் ஓர் சவாலாகும். பட்டினியில் இருந்து மக்களை மீட்டெடுக்க ஆயத்தமாவது நல்லது

மூலதனமுள்ள முதலீட்டாளர்கள் ஒன்றிணைந்து ''உற்பத்தி திறன்'' மையம் அமைத்து செயல்படுவது பொருத்தமானதாக இருக்கும்

இன்று உலகில் நடப்பதென்ன?

திறந்த தாராள பொருளாதாரம்!

உற்பத்தித் திறன் தசாப்தம்!

உணவு நெருக்கடி தீவிரமடைந்துள்ள இவ்வேளையில் மனித மூல வளத்தின் செயல் திறனை அதிகரித்து உற்பத்தித் திறனின் உச்ச பயன் பாட்டை நோக்கிய தன்னிறைவான பொருளாதார சூழலுக்குள் மக்களை இழுக்க கூட்டுறவு, மற்றும் பொது நிறுவனங்கள் தயாராக வேண்டுமென நாடு எதிர்பார்க்கிறது.

# கூட்டுறவு விழிப்பூட்டல் கூட்டமும் தலைவர்களுக்கான கருத்தரங்கும்

இலங்கைக் கூட்டுறவு முகாமை நிறுவனம் நட்டத்தில் இயங்கும் ப.நோ.கூ. சங்கங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் கூட்டுறவு அமைச்சினதும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினதும் உதவியுடன் புத்துயிர் அளிப்பதற்கான திட்டமொன்றை வகுத்துள்ளது இத் திட்டத்தின்படி தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த ப நோ கூ சங்கங்களின் தலைவர்கள் செயலாளர்களை அழைத்து கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் (வ/கி) அவர்களின் தலைமையில் இரண்டு விழிப்புக் கூட்டங்களை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இதன்படி தமிழ் மொழிப் பிரிவினருக்கான முதலாவது விழிப்புக் கூட்டத்தை திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்காக திருகோணமலையில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டம் எதிர்வரும் 20, நவம்பர் 1998 காலை 9.30 மணிக்கு திருகோணமலையில், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் (வ கி) அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெறும் இது சம்பந்தமான மேலதிக அறிவித்தல்கள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் (வ கி) அவர்களால் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் இவ் விழிப்புக் கூட்டத்திற்கான உள்ளக செலவுகளை இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம் தனது புதிய திட்டத்திலிருந்து செலவிடத் தீர்மானித்துள்ளது

20ம் திகதி விழிப்புக் கூட்டத்தை அடுத்து நவம்பர் 21ம், 22ம் திகதிகளில் இக்கல்வித் கருத்தரங்கு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கு சான்றிதழ்கள் வழங்குவதற்கான கருத்தரங்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இக்கல்வித் கருத்தரங்கில் சமுகமளிக்க விரும்புவோர் மேலதிக விபரங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கிளி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்

### மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப
## உற்பத்தி சார் தொழில் நடவடிக்கையில் முதலீடு செய்வோம்

— கு. சிறில்

போர் நடவடிக்கைகள், பொருண்மிய நெருக்கடிகள் மத்தியிலும் கூட்டுறவின் சமகால பங்களிப்பு அதன் இலட்சியப் பயணத்தின் மைல்கற்கள்; ஆனால் நுகர்ச்சிப் பொருள் வியாபாரத்திலும் நிவாரணப் பொருள் விநியோகத்திலும் தமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்தாது மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப தன, வள நிலைமையைக் கருத்திற்கொண்டு சக்தியை உற்பத்தி சார் நடவடிக்கைகளில் முதலீடு செய்வது நீண்ட காலப் பயன்பாட்டிற்கு வழி சமைக்கும் என அண்மையில நடைபெற்ற 76 வது சர்வதேச கூட்டுறவு தின விழாவுக்கு தலைமைதாங்கிய கிளி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் கு. சிறில் கூறுரைத்தார்.

### — கிளி. படைத்தளம் அழிப்பு —
## பின்தள வேலையில் ஈடுபட்ட நாட்டுப்பற்றாளர் சாவு

கிளிநொச்சி படைத்தளம் தாக்கி அழிக்கும் வேளை பின்தள வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நாட்டுப் பற்றாளன் மாணிக்கம் சுதானந்தராசா சிறிலங்காப் படைகளின் எறிகணை வீச்சுக்கு இலக்காகி சாவைத் தழுவிக்கொண்டார்

கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் ஆகியவற்றில் கிளை முகாமையாளராக பதவி வகித்த இவர் கூட்டுறவுக் கல்லூரி மாணவருமாவார்.

அவரது புகழுடலுக்கு இறுதி அஞ்சலி நடாத்தப்பட்ட போது பெருந்தொகையான மக்களும், கூட்டுறவுப் பணியாளர்களும், கூட்டுறவாளர்களும் கலந்துகொண்டு இறுதி மரியாதை செலுத்தினார்கள்

## முதியோர் தினம் அன்று தத்தெடுப்பு நிகழ்வு

வவுனேரிக்குளத்தில் அமைந்துள்ள யோகர் சுவாமிகள் திருவடி நிலைய வயோதிபர் இல்லத்தில் சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்வில் அரச, அரச சார்பற்ற மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றி முதியோர்களை உற்சாகப்படுத்தினர்.

முதியோர் தத்தெடுக்கும் நிகழ்வு வித்தியாசமான அம்சமாக அமைந்தது இந்து இளைஞர் பேரவை, வேறு பொது நிறுவனங்கள், மற்றும் முழங்காவில் விநாயகபுரம் விவசாய கூட்டுறவுச் சங்கத் தலைவர் மு நவரட்ணம் ஆகியோர் முதியோர்கள் சிலரை தத்தெடுத்தனர். மனதை நெகிழவைக்கும் காட்சியாக இது அமைந்தது.

## உலக தராதரங்கள் தினம் ஒக்டோபர் 14

மேற்படி தினம் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது சர்வதேச தராதரங்கள் நிலையம் ஜெனிவா நகரில் உள்ளது இது 1946-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி நிறுவப்பட்டது இத்தினமே சர்வதேச தராதரங்கள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது அனைத்துப் பொருட்களிலும் சிறந்த தரக் கட்டுப்பாட்டை பேணுவதே தராதரங்கள் நிலையத்தின் நோக்கமாகும்

'நானாந்த வாழ்க்கையில் தராதரங்கள்'' என்பதே இவ் வருட தொனிப் பொருளாகும சர்வதேச தராதரங்கள் நிலையமும் இலங்கை தராதரங்கள் நிறுவனமும இணைந்து இலங்கையில் பல போட்டிகளை நிகழ்த்துகின்றன இதில் நாலோக்க வைத்திய சாலைக்கு இலங்கையில் சிறந்த தராதரத்திற்கான பரிசு கிடைத்துள்ளது. நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கிடையிலான போட்டியில் சிறந்த தராதரத்திற்கான பரிசு ஈ-டி-எஸ் டெவலோ சீமெந்து உற்பத்தி நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது

செ றெனேஸ்

### வன்னி மக்களின் வறுமை நிலை போக்க
## யாழ். மாவட்ட மக்களின் உதவிக்கரம்

ஸ்ரீலங்கா அரசின் மனிதாபிமானமற்ற நிவாரண வெட்டினால் கடும் பாதிப்புக்குள்ளாகி பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ள வன்னி வாழ்மக்களுக்கு உதவி வழங்கிட யாழ்-மறை மாவட்ட நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுபெரு முயற்சி எடுத்துள்ளது.

இதன்படி யாழ் மாவட்டத்தில் வாழுகின்ற மக்களிடமிருந்து ஒருவேளை உணவையாவது சேகரித்து வன்னி மக்களுக்கு அனுப்பி வைப்பதற்கான துரித முயற்சியில் ஈடுபட்டு வருகிறது ஆணைக்குழுவின் பகிர்ந்து வாழும் மனப்பக்குவத்தை அனைவரும் வரவேற்கின்றோம்,

### அரசுக்கு
## புதிய தலைவலி

சிறிலங்கா இராணுவத்தில் இருந்து தப்பி ஓடும படையினர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் இராணுவப் பற்றாக்குறை ஏற்பட்டு வருவதாகவும இதனால் தப்பியோடிய சுமார் பதினைந்தாயிரம் படையினரை கைதுசெய்ய நாடு தழுவிய ரீதியில் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.


கிளி .மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம சார்பாக இப் பத்திரிகை கிளி. மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின சமாச அச்சகத்தில் 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org